5th November 1966]

(*c*) & (*d*) The Harijans have no objection to this road along the northern approach. The questions do not arise.

(*e*) The Government are aware that a sum of Rs. 3 was being collected per lorry for transporting salt for use of the private road along the northern approach in respect of which land acquisition has been approved by the Government. But the owners of lands have been requested to give up the levy and they have agreed to it.

(*f*) 7·14 acres, besides 0·98 acre of poramboke to be transferred to road poramboke.

(*g*) 44.

(*h*) 3·03 acres; 45 pattadars.

APPENDIX III

[*Vide* answer to Starred Question No. 441 at page 313.]

As early as in 1931 it was felt that the Palar river was over burdened with irrigation beyond its capacity. The Government therefore directed in 1931 that no new irrigation works should be constructed in the Palar Basin nor any extension of works should be taken up and that there should be no conversion from dry to wet or from single crop to double crop wet. It was also ordered that the charge for a second crop on any wet land should not be compounded in that area. These restrictions are the original "Palar Basin Rules".

2. In the late forties, in the interests of the Grow More Food Campaign the Government relaxed the Palar Basin Rules and permitted—

(*a*) sinking of new wells or tube-wells for irrigation of dry lands in the Palar Basin provided such wells were 2,000 feet away from spring heads of channels; and

(*b*) extension of irrigation to dry lands for an irrigated crop after a favourable north-east monsoon.

3. In 1959, the Government ordered that the relaxation of the prohibition of sinking of new wells within a minimum distance of 2,000 feet may be granted only in *deserving* cases.

4. In 1961, Palar Basin Rules were further relaxed as follows :—

(*a*) New wells may be permitted for irrigating the lands in the Palar Basin, provided such wells were two furlongs away from the spring heads of channels and one furlong away from the spring channel and provided crops grown correspond to the classification of the land registered as single crop wet, double crop wet, dry, etc.

(*b*) Horse-power of each pumpset should not exceed five.

5. In May 1963, with a view to safeguard the protected water-supply schemes depended upon the Palar river, the Government ordered that in cases where the sub-soil water were the source for water-supply schemes sinking of wells or tube-wells with or without the installation of pumpsets be prohibited within a distance of 2,000 feet from either bank of the Palar river and also up and down stream side.

6. As it was represented to Government that the relaxations then in force did not afford the desired relief, a joint inspection of the areas was made by the Commissioner, Land Revenue and Food Production and the Chief Engineer (Irrigation) and on their recommendation the Palar Basin Rules have been further modified in November 1963 as follows and these rules will be in force for a period of five years from the above date when it will be reviewed further :—

(i) Sinking of new wells or installation of pumpsets within two furlongs of the spring heads and one furlong of the spring channels taking off from the Palar river or from any of its tributaries in the Palar Basin will be strictly prohibited.

(ii) If there are any wells or infiltration galleries, etc., sunk in the bed of the Palar river or its tributaries for supplying drinking water to any local body, or if any such scheme is proposed or is under investigation, sinking of wells or tube-wells, with or without installation of pumpsets, will be prohibited, within a distance of 2,000 feet of such well, infiltration gallery, etc.

(iii) The spring channel should be deemed to end at the point at which distribution starts.

(iv) In the ayacut of the concerned spring channel itself, there will be no restriction on the sinking of wells and the installation of pumpsets to stabilise the ayacut.

(v) There will be no restriction regarding the crops grown under wells in the Palar Basin.

(vi) No well in the Palar Basin shall be allowed to have pumps of more than 5 H.P. capacity.

(NOTE.—The Collector will have powers to relax this condition in special circumstances, for reasons to be recorded in writing.)

(vii) In respect of independent Kasams and channels the restrictions regarding sinking of wells and installation of pumpsets will be imposed only with a view to protecting the source of irrigation from depletion. Kasams which have not functioned for the past many years should be treated as abandoned and the ayacuts under them should be converted into dry. These abandoned Kasams need not be taken into account at all when giving clearance certificates. In regard to Kasams which are dry in summer and start functioning only when the surrounding water table rises, that is during the monsoon period, the restrictions need not be imposed, as very few pumps will work during the monsoon period, and their

effect on such Kasams will be practically ' Nil '. But in respect of other Kasams which function even in summer, the restrictions will be applicable.

(viii) There will be general exceptions to the above rules as follows : —

(*a*) If a well has been sunk in the restricted zone but in Morambu (i.e., after blasting) the question of pumping affecting the spring head or spring channel is rather remote. Such wells may therefore be given clearance certificates.

(*b*) If the ayacutdars, on being consulted express no objection to pumpsets in the restricted area, clearance certificates can be given.

(ix) There may be hard cases in which the Madras State Electricity Board has already entered into agreement with the ryots in the restricted zone and the ryots have purchased the pumpsets and are ready to receive connection. In these cases also clearance certificates should be given, provided the agreement had been entered into and the pumpsets had been purchased prior to 1st January 1963.

(x) Permission to sink wells or install pumpsets in the Palar Basin should be given by the Collector in consultation with the Executive Engineer, Public Works department, concerned.

7. In implementing the orders regarding grant of clearance certificates certain difficulties were brought to notice by the Madras State Electricity Board and the Collector of North Arcot. The Government have therefore ordered in July 1965 that the Collector himself can issue the clearance certificate without reference to the Executive Engineer, Public Works department, except in cases where technical advice is required and also where 5 H.P. limit is proposed to be exceeded.

8. *Justification for the continuance of the Palar Basin Rules.*— The deficiency of water for irrigation under the Palar Anicut System and generally in Palar water shed was the subject of complaint even prior to 1931. Hence, after a careful examination of the issues the Palar Irrigation Committee appointed then concluded that the actual extent of cultivation considerably exceeded the calculated probable area that the system could irrigate. In view of this, the Government imposed a total ban on development of irrigation in the Palar Basin Rule in June 1931 as the system was burdened with the irrigation over an area beyond its capacity.

However, with a view to improve the food production, the above orders were being relaxed to the extent feasible from 1948 onwards under the Grow More Food Campaign in favour of sinking new wells. The orders now in force as set out in paragraphs 6 and 7 above do not totally prevent sinking of new wells; but only restrict expansion to the extent necessary in order to prevent reduction of spring supply and mutual interference among them.

[5th November 1966

These rules are thus intended purely to safeguard the interests of the ryots themselves under the Palar Basin and their withdrawal cannot be justified without intensive scientific investigations as such a course would aggravate their difficulties. These investigations are now being done under the United Nations Ground Water Project.

1. பாலாறு அளவுக்கதிகமாகவே பாசனக் காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்று 1931-ம் ஆண்டிலேயே உணரப் பட்டது. எனவே, பாலாறு வடிநிலத்தில் புதிய பாசன வேலைகள் எதுவும் அமைக்கப்படக்கூடாது என்றும் பாசன விஸ்தரிப்பு வேலைகள் எவையும் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்படக் கூடாது அல்லது ஒரு போக நிலம் எதுவும் இருபோக நன்செய் நிலமாக மாற்றப்படக் கூடாது என்றும் அரசாங்கம் 1931-ம் ஆண்டில் கட்டளையிட்டது. நன்செய் நிலத்தில் உள்ள இரண்டாம் போகப் பயிருக்கான கட்டணம் அப்பகுதியில் உடன்பட்டுத் தீர்த்துக்கொள்ளப்படக் கூடாது என்றும் ஆணையிடப்பட்டது. இந்த வரையறைகளே “பாலாறு வடிநில மூல விதிகள்” ஆகும்.

2. 1948-ம் ஆண்டில், உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில், அரசாங்கம் பாலாறு வடிநில விதிகளைத் தளர்த்தி, அடியிற்கண்டவற்றை அனுமதித்தது :—

(அ) பாலாறு வடிநிலத்தில், புன்செய் நிலங்களின் பாசனத் திற்காகப் புதிய கிணறுகளை அல்லது குழாய்க் கிணறுகளை வெட்டுதல்; ஆனால் அத்தகைய கிணறுகள், கால்வாய்களின் ஊற்றுக்கண்களிலிருந்து 2,000 அடிக்கு அப்பால் இருக்கவேண்டும்.

(இ) வடகிழக்கு பருவ மழை நல்ல வகையில் பெய்த பிறகு பாசனம் பெறும் பயிர் ஒன்றை விளைவிக்கப் புன்செய் நிலங் களுக்குப் பாசன வசதிகள் விஸ்தரித்தல்.

3. புதிய கிணறுகளை வெட்டுவது குறித்த தடைகளைத் தளர்த்தி வழங்கப்படும் அனுமதி தக்க விஷயங்களில் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் 1959-ம் ஆண்டில் ஆணையிட்டது.

4. 1961-ம் ஆண்டில், பாலாறு வடிநில விதிகள் அடியிற்கண்ட வாறு மேற்கொண்டும் தளர்த்தப்பட்டன:—

(அ) பாலாறு வடிநிலத்தில் உள்ள நிலங்களைப் பாசனம் செய்வதற்காகப் புதிய கிணறுகள் வெட்டிக்கொள்ளலாம். ஆனால், அக் கிணறுகள், கால்வாய்களின் ஊற்றுக்கண்களிலிருந்து இரண்டு பர்லாங்குக்கு அப்பாலும் ஊற்றுக்கால்வாயிலிருந்து ஒரு பர்லாங் தள்ளியும் இருக்கவேண்டும்; மேலும் ஒருபோக நன்செய், இரு போக நன்செய், புன்செய் போன்று நிலத் தரப்பிரிவினைப் பதிவுக் கேற்ப பயிர்கள் பயிரிடப்படவேண்டும்.

(இ) ஒவ்வொரு பம்புசெட்டும் ஐந்து குதிரைத் திறனுக்கு மேற்பட்ட திறனுடையதாக இருக்கக்கூடாது.

5th November 1966]

5. 1963 மே மாதத்தில், பாலாற்றையே முழுவதும் நம்பியுள்ள நன்னீர் வழங்கு திட்டங்கள் நன்கு செயல்படுவது சாத்தியமாக இருக்கும்பொருட்டு, பூமிக்கு அடியில் உள்ள நீர் ஆதாரங்களே நீர் வழங்கு திட்டங்களுக்கு அடிப்படையாக இருக்கும் இடங்களில், பாலாற்றின் இரு கரைகளிலிருந்தும், நீரோட்டத்தின் வழியேயும் எதிரோட்டத்தின் வழியேயும் கரையிலிருந்து 2,000 அடி தூரத்திற்குள் பம்பு செட்டுடனே பம்புசெட்டின்றியோ கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் அமைக்கப்படக்கூடாது என்று அரசாங்கம் ஆணையிட்டது.

6. விதிகள் தளர்த்தப்பட்டும், சலுகைள் செயலில் இருந்தும், வேண்டிய நிவாரணம் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திடம் முறையிடப்பட்டது. எனவே, நிலவரி, வருவாய்-உணவு உற்பத்திக் கமிஷனரும் பாசனத் தலைமைப்பொறியாளரும் சேர்ந்து சம்பந்தபட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர். அவர்களது பரிவுரையின்மேல் பாலாறு வடிநில விதிகள் 1963 நவம்பரில் மேற்கொண்டும் மாற்றியமைக்கப்பட்டன. இந்த விதிகள், மேற்சொன்ன தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை செயலில் இருக்கும்; ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்த விதிகள் மீண்டும் பரிசீலனை செய்யப்படும்:

(1) ஊற்றுக்கண்களிலிருந்து இரண்டு பர்லாங்குகளுக்குள்ளும் பாலாற்றிலிருந்து அல்லது பாலாறு வடிநிலத்தில் ஓடும் யாதொரு கிளைக் கால்வாயிலிருந்து பிரியும் ஊற்றுக்கால்வாய்களிலிருந்து ஒரு பர்லாங் தொலைவுக்குள்ளும் புதிய கிணறுகள் வெட்டுவது அல்லது பம்புசெட்டுகள் அமைப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்படும்.

(2) ஓர் உள்ளூர் ஆட்சி சபைக்குக் குடிநீர் வழங்க, பாலாற்றுப் படுகையில் அல்லது அதன் கிளைக் கால்வாய்களின் படுகையில் கிணறுகள் அல்லது வடிமுனைக் கிணறுகள் வெட்டப்பட்டிருப்பின், அல்லது அவ்வாறு வெட்டத் திட்டமிட்டிருப்பின் அல்லது அத்தகையதொரு வேலைத் திட்டம் பரிசீலனையிலிருப்பின், அத்தகைய கிணறு, வடிமுனைக் கிணறு முதலியவற்றிலிருந்து 2,000 அடி தொலைவுக்குள் பம்புசெட்டுகளுடனே பம்புசெட்டுகளின்றியோ கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் அமைப்பது தடைசெய்யப்படும்.

(3) ஊற்றுக் கால்வாய், நீர் வழங்கு வேலை தொடங்குமிடத்தில் முடிவதாகக் கொள்ளப்பட வேண்டும்.

(4) சம்பந்தப்பட்ட ஊற்றுக்கால்வாய் குறித்த ஆயக்கட்டில் ஆயக்கட்டுக்குத் தொடர்ந்து தண்ணீர் கிடைக்கச் செய்வதற்காகக் கிணறுகள் வெட்டுவதற்கும் பம்புசெட்டுகளை நிறுவுவதற்கும் தடையிருக்காது.

(5) பாலாறு வடிநிலத்தில் கிணற்றுப் பாசனத்தின் கீழ் விளைவிக்கும் பயிர்கள் குறித்துக் கட்டுப்பாடு எதுவும் இல்லை.

(6) பாலாறு வடிநிலத்தில் உள்ள எக்கிணறும் 5 குதிரைத் திறனுக்கு மேல் திறன்கொண்ட விசை ஏற்றங்களைக்கொண்டதாக இருக்கக்கூடாது.

குறிப்பு—தனிப்பட்ட சூழ்நிலைகளில் இந்த வரையறையைத் தளர்த்த கலெக்டருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அதற்குரிய காரணங்களை அவர் எழுதிவைக்கவேண்டும்.

(7) தனிப்பட்ட குளங்கள், கால்வாய்கள் சம்பந்தமாகவும் கிணறுகள் வெட்டுவது குறித்தும் பம்புசெட்டுகள் நிறுவுவது குறித்தும் தடை ஆணை பிறப்பிக்கப்படும். பாசன ஆதாரம் அறவே வறண்டுபோகாது தடுப்பதுதான் இதன் நோக்கமாகும். பல ஆண்டுகளாகச் செயல்படாத குளங்கள், பயனற்ற குளங்களாக விட்டு விடப்படவேண்டும். அவற்றின்கீழ் உள்ள ஆயக்கட்டுகள் புன்செய் ஆயக்கட்டுகளாக மாற்றப்படவேண்டும். இசைவுச் சான்று வழங்கும் பொழுது, இவ்வாறு கைவிடப்பட்ட குளங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. கோடையில் வறண்டு, மழைக்காலத்தில் சுற்றிலும் நீர்மட்டம் உயருகையில் நீர் பெறத்தொடங்கும் குளங்கள் குறித்து இந்தக் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டியதில்லை. ஏனெனில், மழைக்காலத்தில் ஒரு சில விசை ஏற்றங்களே செயல்படுமாதலால், அவை செயல்படுவதால் அக்குளங்கள் பெரிதும் பாதிக்கப் படமாட்டா. ஆனால், கோடைக் காலத்திலும் நீர் உள்ள குளங்கள் விஷயத்தில், இக்கட்டுப்பாடுகள் பொருந்தும்.

(8) மேற்சொன்ன விதிகளுக்குப் பொது விலக்குகள் உண்டு; அவை வருமாறு:—

(அ) கட்டுப்பாட்டு மண்டலத்தில் ஒரு கிணறு வெட்டப் பட்டிருந்து, ஆனால் அது பாறைப் பகுதியில் இருந்தால் (அதாவது வெடி வைத்துத் தகர்த்த பின்) அங்கு விசை ஏற்றத்தினால் ஊற்றுகள் அல்லது ஊற்றுக்கால்வாய் பாதிக்கப்படுவதற்கு அதிக சாத்தியம் இல்லை. அத்தகைய கிணறுகள் விஷயத்தில் இசைவுச் சான்றுகள் வழங்கப்படலாம்.

(இ) கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பம்புசெட்டுகளை நிறுவுவது குறித்து ஆயக்கட்டுதாரர்கள் கலந்தாலோசிக்கப்பட்டு அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காவிடின், இசைவுச் சான்றுகள் வழங்கப்படலாம்.

(9) கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ்நாடு மின்சார போர்டு சில குடியானவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கலாம். அவர்கள் பம்புசெட்டுகள் வாங்கி, மின்சக்தி இணைப்புக்காகக் காத்திருக்கலாம். இவர்களுக்கு இசைவுச் சான்றிதழ் கொடுக்க மறுத்தால் அவர்கள் அவதியுறுவர். எனவே, அவர்களுக்கும் இசைவுச் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும். ஆனால் அவர்கள் விஷயத்தில் அந்த ஒப்பந்தம் 1—1—1963-க்கு முன்னர் கையெழுத் திடப்பட்டு அத்தேதிக்கு முன்னர் பம்புசெட்டுகளும் வாங்கப் பட்டிருக்க வேண்டும்.

5th **November 1966]**

(10) கலெக்டர், பொதுப்பணித் துறையின் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளரைக் கலந்தாலோசித்துப் பாலாறு வடிநிலத்தில் கிணறுகள் வெட்ட அல்லது பம்புசெட்டுகள் நிறுவ அனுமதி வழங்கவேண்டும்.

7. இசைவுச்சான்றுகள் வழங்குவது குறித்த ஆணைகளை நிறைவேற்றுவதில் உள்ள சில இடர்ப்பாடுகளைத் தமிழ்நாடு மின்சார போர்டும் வட ஆற்காடு கலெக்டரும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். எனவே, கலெக்டர், தொழில் நுட்ப ஆலோசனை வேண்டாதவிடத்தும் 5 குதிரைத் திறன் வரையறையை விஞ்சக் கருதாத இடத்தும், பொதுப்பணித் துறை நிர்வாகப் பொறியாளரைக் கலந்தாலோசிக்காமலேயே இசைவுச் சான்றிதழ்களை வழங்கலாம் என்று அரசாங்கம் 1965 ஜூலை மாதத்தில் ஆணையிட்டது.

8. **பாலாறு வடிநில விதிகளைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான காரணம்.**—பாலாறு அணைக்கட்டு ஏற்பாட்டின்கீழ் பாசனத்திற்கான நீர் குறைவாக இருப்பதுபற்றியும் பொதுவாக பாலாறு ஆற்றுப்பள்ளத்தாக்கில் நீர் பற்றாக்குறை இருப்பதுபற்றியும் **1931-ம்** ஆண்டுக்கு முன்பிருந்தே புகார்கள் வந்துகொண்டிருந்தன. எனவே அப்பொழுது நியமிக்கப்பட்ட பாலாறு பாசனக் குழு, பல்வேறு கோணங்களிலிருந்து இவ்விஷயத்தைக் கவனமாக ஆராய்ந்த பின்னர், இப்பாசன ஏற்பாட்டின்கீழ் பாசனம் பெறத் திட்டமிடப்பட்ட பரப்பளவைவிட உண்மையில் பாசனம் பெறும் பரப்பளவு அதிகம் என்ற முடிவுக்கு வந்தது. இதைக் கருத்தில் கொண்டே, அரசாங்கம் 1931 ஜூன் மாதத்தில், பாலாறு வடிநிலத்தில் பாசன வசதி அதிகரிப்பை முழுவதும் தடைசெய்தனர். ஏனெனில், அதன் பாசனத்திறனுக்கு அதிகமான அளவுக்கு அதன் பாசனச்சுமை உயர்ந்திருக்கிறது.

ஆயினும், உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், புதிய கிணறுகள் வெட்ட அனுமதியளிக்கும் வகையில், மேற்சொன்ன ஆணைகள் 1948-ம் ஆண்டு முதற்கொண்டு தளர்த்தப்பட்டன. தற்போது செயலில் உள்ள ஆணைகள் 6, 7-வது பாராக்களில் விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆணைகள் புதிய கிணறுகள் வெட்டுவதை அறவே தடை செய்யவில்லை. ஆனால், ஊற்று நீர் குறைவதைத் தடுக்கும் நோக்கத்துடனும் கிணறுகளும், ஊற்றுகளும் ஒன்றுக்கொன்று பாதகமாகச் செயல்படாதவண்ணம் பார்த்துக் கொள்வதற்கும் அவசியமான வகையில் பாசன வசதிகள் விரிவாக்கப்படுவதை மட்டும் கட்டுப்படுத்துகின்றன. குடியானவர்களின் நலனைப் பாதுகாப்பதே இவ் விதிகளின் நோக்கமாகும். இந்த விதிகளை, அறிவியல் முறையில் நன்கு ஆராயாமல், ரத்து செய்ய முடியாது. ஏனெனில், அவ்வாறு செய்தால் உழவர்களது இடர் அதிகமாகும். இந்த ஆராய்ச்சி "ஐ.நா. நம் திட்டம்" என்பதன் கீழ் இப்போது நடைபெற்று வருகிறது.